89

/பதிவுத்துறை/

அனுப்புநர்

பதிவுத்துறைத்தலைவர்,
பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,
சென்னை-28.

பெறுநர்

அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்,
அனைத்து மாவட்டப்பதிவாளர்கள்,
அனைத்து சார்பதிவாளர்கள்.

கடித எண்.39223/ஜி2/2017-2, நாள் 28.09.2017.

அய்யா/அம்மையீர்,

பொருள் : இந்து திருமண விதிகள், 1967ல் விதி 13-அன் கீழ் திருத்தம் கோரி பெறப்படும் மனுக்கள் - தொடர்பாக.

பார்வை : பதிவுத்துறைத்தலைவரின் சுற்றறிக்கை எண்.34612/ ஜி2/2016, நாள் 7.6.2016.

*******

பார்வையில் காணும் சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக பதிவு அலுவலர்களுக்கு கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது:-

1) மணமக்கள், பெற்றோர் மற்றும் சாட்சிகளின் அடையாள ஆதார ஆவணமாக ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட ஆவணங்களுடன் தற்போது ஆதார் அட்டையையும் ஒரு அடையாள (Identity) ஆவணமாக ஏற்று பதிவு மேற்கொள்ள அறிவுறுத்தப்படுகிறது. அரசு சேவை பெற இதனை ஆதாரமாக கோரலாம் என The Aadhaar (Targetted Delivery of Financial and other Subsidies benefits and Services) Act, 2016 பிரிவு-7ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதனை குடியுரிமை ஆதாரமாகவோ அல்லது இருப்பிட ஆதாரமாக ஏற்க இயலாது என மேற்படி சட்ட பிரிவு-9ல் எடுத்துரைக்கப்பட்ட நிலையில் இதனை அடையாள (Identity) ஆதாரத்திற்கான ஆவணமாக மட்டுமே ஏற்க தெரிவிக்கப்படுகிறது.

Verified RealEstate™

2) மணமக்களின் பெற்றோரது பெயர்கள் மற்றும் முகவரிகளை சரி பார்க்கும் பொழுது, அவர்கள் தாக்கல் செய்யும் ஆதார ஆவணங்களில் கண்டுள்ள பெயர் மற்றும் முதலெழுத்தும் (Name and Initial) விண்ணப்பத்தில் பூர்த்தி செய்யப்பட்ட பெயர் மற்றும் முதலெழுத்தும் (Name and Initial) மற்றும் முகவரிகள் ஒத்துள்ளதா (Identical) என பதிவு அலுவலர்கள் நன்கு பரிசீலித்த பின்னரே பதிவு மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது.

3) மணமக்களின் பெற்றோர் யாரேனும் இறந்து விட்டதாக விண்ணப்பத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், இறந்தவரின் அசல் இறப்புச் சான்றை சரிபார்த்து அதன் நகல் பெறப்பட்டு கோர்வைச் செய்யப்படவேண்டும்.

4) மேலும் மணமக்களில் யாரேனும் ஒருவர் கணவர் அல்லது மனைவியை இழந்தவர் (Widow/Widower) என விண்ணப்பத்தில் குறிப்பிடும் நிகழ்வில், இறந்த கணவர்/மனைவியின் இறப்பு சான்றின் (deceased Spouse's Death Certificate) அசலை சரிபார்த்து அதன் நகலை கண்டிப்பாகப் பெற்று கோர்வைச் செய்த பின்னரே பதிவு மேற்கொள்ள வேண்டும் எனவும் அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/- 28.9.2017.
பதிவுத்துறைத்தலைவர்.

/ஆணைப்படி/

28-9-17

கூடுதல் பதிவுத்துறைத்தலைவர் (புலனாய்வு)

28/9/17

நகல் : இயக்குநர்,
பதிவுத்துறை பயிற்சி நிலையம்,
182, பாரதி சாலை,
ராயப்பேட்டை,
சென்னை-14.

Verified RealEstate™